# MENCEGAH DARI SERANGAN PENGGANAS

## APA YANG BOLEH ANDA LAKUKAN

### SELALU BERWASPADA

- Peka dengan kegiatan-kegiatan atau kelakuan-kelakuan yang menunjukkan tanda-tanda radikal yang berlaku di kalangan masyarakat anda. Beri perhatian kepada
  - Mereka yang berasa simpati terhadap para pengganas dan matlamat mereka
  - Orang-orang yang cuba mempengaruhi orang lain supaya menyokong pengganasan dan/atau menyertai kegiatan pengganasan
  - Orang-orang yang mempamerkan tanda kebesaran atau simbol yang menyokong kumpulan pengganas
- Berwaspadalah terhadap tanda-tanda yang mencurigakan atau mempunyai niat jahat

**Penampilan (seseorang itu)**

- Seseorang yang sengaja menyembunyikan identiti, tujuan melawat, atau objek di badannya
- Sesiapa yang berlegar-legar untuk tempoh masa yang terlalu lama, kadangkala membuat rakaman video di persekitarannya
- Seseorang yang menunjukkan tanda-tanda keresahan, seperti contoh, berpeluh secara berlebihan

**Barang-barang kepunyaannya**

- Sebarang barangan yang dibiarkan tanpa diawasi di tempat-tempat awam, atau terbiar dalam keadaan yang agak pelik
- Bungkusan atau mel yang memerlukan penggunaan pita pelekat yang berlebihan
- Bungkusan atau mel yang mempunyai bau yang pelik seperti bau badam atau gula-gula badam (marzipan)

**Kereta**

- Sebarang kenderaan yang dipandu di sesebuah tempat secara berkali- kali termasuklah dalam masa-masa yang berbeza
- Kenderaan yang ditinggalkan secara tiba-tiba oleh pemandunya di tepi jalan atau bersebelahan bangunan
- Kenderaan yang terlalu sarat yang mempunyai but kereta atau bahagian bawah kereta yang terturun
- Tanda-tanda bahawa kenderaan itu telah diubahsuai

- Jangan dekati orang-orang yang mencurigakan itu atau menyentuh barang-barang yang mencurigakan. Beritahu pegawai keselamatan atau telefon Polis di talian '999' untuk bantuan kecemasan Polis.

### BERSEDIALAH

**Walaupun jarang berlaku, sekiranya anda berada di dalam keadaan di mana anda diserang dengan senjata api atau senjata merbahaya**

**LARI > SEMBUNYI > BERITAHU**

- **LARI bila ia selamat untuk berbuat demikian**
- Bergerak dengan cepat and senyap, jangan nampakkan diri kepada para penyerang
- Tinggalkan barang-barang anda
- Bertegas dengan yang lain untuk pergi bersama anda

- **SEMBUNYI jikalau anda tidak boleh larikan diri**
- Cari tempat perlindungan dan jangan nampakkan diri
- Kuncikan diri anda tapi jangan pula terperangkap
- Berdiam dan tukarkan mod telefon anda kepada mod senyap

- **BERITAHU pihak Polis apabila selamat untuk berbuat demikian (Tel:999)**
- Jika tidak selamat untuk bercakap, hantarkan sms ke 71999. Beritahu lokasi anda dan butiran-butiran penyerang-penyerangnya
- Anda juga boleh memberikan maklumat lanjut melalui i-Witness di aplikasi Police@SG
- Ikuti arahan dari pihak Polis dan jangan berbuat sebarang pergerakan yang tiba-tiba

### LIBATKAN DIRI ANDA

Dapatkanlah maklumat lanjut dan uji pengetahuan anda dengan memuat turun aplikasi Police@SG atau melungsuri lelaman http://www.police.gov.sg

Daftarkan diri di **Perkhidmatan Amaran Masyarakat** (CAS) melalui Pusat Polis Kejiranan anda yang terdekat

Jadilah sukarelawan dan daftar diri untuk

- **Kumpulan Pengawasan Kejiranan (NWG)**
  Awasilah rumah sesama sendiri untuk mengenalpasti barangan, kelakuan dan kegiatan yang mencurigakan di kejiranan dan menggalakkan cara-cara mencegah jenayah.
- **Pasukan Peronda Penduduk (COP)**
  Jadilah sebahagian kumpulan penduduk kami yang secara proaktif mengawasi estet kejiranan mereka untuk mencegah, menghalang dan mengesan jenayah.

Dapatkan maklumat lanjut tentang Police CAS, COP dan NWZ melalui video ini http://bit.ly/CommPolSchemes. Ataupun anda boleh menghubungi
atau melawat Pusat Polis Kejiranan yang terdekat.

Lawati www.sgsecure.sg

Muat turun aplikasi Police@SG

SGSECURE
STAY ALERT • STAY UNITED • STAY STRONG

# பயங்கரவாதத்திற்கு எதிராக பாதுகாத்தல்

## உங்களால் என்ன செய்யமுடியும்

### விழிப்புணர்வுடன் இருந்திடுக

- உங்கள் சமூகத்தினரின் நடவடிக்கைகள் அல்லது நடத்தைகள் மீது கவனம் செலுத்துங்கள். அவை தீவிரவாத அறிகுறிகளாக இருக்கலாம். கீழ்காணும் நபர்கள் மீது கவனமாக இருங்கள்.
  - பயங்கரவாதிகளுக்கும் அவர்களுடைய நோக்கங்களுக்கும் அனுதாபப்படும் மக்கள் மீது கவனம்
  - பயங்கரவாதத்தை ஆதரிக்கவும் மற்றும்/ அல்லது பயங்கரவாத நடவடிக்கையில் பங்கெடுக்கவும் மற்றவர்களைத் தூண்ட முற்படும் மக்கள் மீது கவனம்
  - பயங்கரவாதக் குழுக்களை ஆதரிக்கும் சின்னங்களை அல்லது அடையாளக் குறிகளைக் காட்டுகின்ற மக்கள் மீது கவனம்.
- சந்தேக அல்லது தீய எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற அறிகுறிகள் குறித்து கவனம்

**(ஒருவருடைய) வெளித் தோற்றம்**

- தன்னுடைய அடையாளம், வந்ததற்கான நோக்கம் அல்லது தன்னுடைய உடலில் பொருட்களை மறைக்க முயல்கின்ற நபர் மீது கவனம்
- நேரத்திற்கு அப்பால் சுற்றித்திரிகின்ற, சில நேரங்களில் சுற்றுப்புறத்தை வீடியோ பதிவுகள் செய்கின்ற யார் மீதும் கவனம்.
- கவலை அல்லது ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற எந்தவொரு உடல்ரீதியிலான அறிகுறிகள் மீதும் கவனம், எ.கா. அதிகமாக வியர்ப்பது

**உடமைகள்**

- பொது இடங்களில் பொருட்கள் கவனிப்பின்றி விடப்படுவது, அல்லது இடத்திற்குப் பொருத்தமற்ற விதத்தில் பொருட்கள் கைவிடப்படுவது குறித்து கவனம்.
- பொட்டலங்களில் அல்லது அஞ்சலில் ஒட்டு நாடாவை மிகுதியாகப் பயன்படுத்தி இருப்பது குறித்து கவனம்.
- வாதுமை அல்லது இனிப்புப் பண்டம் போன்ற விநோதமான வாசனை வீசும் பொட்டலங்கள் அல்லது அஞ்சல் மீது கவனம்.

**வாகனங்கள்**

- வெவ்வேறு சந்தர்ப்பங்கள் உட்பட ஒரே பகுதியில் மீண்டும் மீண்டும் சுற்றுகின்ற எந்தவொரு வண்டி மீதும் கவனம்.
- சாலையோரம் அல்லது கட்டடங்கள் பக்கத்தில் ஓட்டுனர்கள் திடீரென்று கைவிட்டுச் செல்லும் எந்தவொரு வண்டி மீதும் கவனம்.
- வண்டியின் அடித்தரை அல்லது பின்பக்கம் இறங்கிய நிலையில் உள்ள அதிக சுமையுள்ள எந்தவொரு வண்டி மீதும் கவனம்
- முறையற்ற மாற்றங்கள் செய்யப்பட்ட அறிகுறிகளுடன் காணப்படும் எந்தவொரு வண்டி மீதும் கவனம்

- சந்தேக நபர்களை அணுகாதீர்கள் அல்லது சந்தேகப் பொருட்களைத் தொடாதீர்கள். பாதுகாப்பு அதிகாரிக்கு தெரிவியுங்கள் அல்லது அவசர போலிஸ் உதவிக்கு, '999' எண்ணில் போலிசை அழையுங்கள்.

### ஆயத்தமாக இருந்திடுக

**துப்பாக்கிகளால் அல்லது ஆயுதங்களால் தாக்குதல் நடக்கும் அரிதான நிகழ்வில்**

**ஓடு > ஒளி > தெரிவி**

- **பாதுகாப்பான தருணத்தில், முடிந்தால் ஓடுங்கள்**
- விரைவாகவும் அமைதியாகவும் நகர்ந்து செல்லுங்கள், தாக்குதல்காரர்களின் பார்வையில் இருந்து விலகி இருங்கள்
- உங்கள் உடைமைகளைப் பின்னால் விட்டுச் செல்லுங்கள்
- உங்களுடன் மற்றவர்கள் வரவேண்டும் என கட்டாயப்படுத்துங்கள்

- **ஓட முடியவில்லை எனில் ஒளிந்துகொள்ளுங்கள்**
- ஒளிந்துகொள்ள மறைவிடம் தேடுங்கள், பார்வையில் இருந்து விலகியிருங்கள்
- உள்ளே பூட்டிக்கொள்ளுங்கள் ஆனால் உள்ளே சிக்கிக்கொள்ளாதீர்கள்
- சத்தம் போடாதீர். உங்கள் கைபேசியை ஓசையின்றி வைத்துக்கொள்ளுங்கள்

- **பாதுகாப்பான தருணத்தில், முடிந்தால் போலிசுக்கு தெரிவியுங்கள் (எண்: 999)**
- அழைப்பதற்கு பாதுகாப்பான நிலை இல்லை என்றால், 71999க்கு குறுஞ்செய்தி அனுப்புங்கள். நீங்கள் இருக்கும் இடத்தையும் தாக்குதல்காரர்கள் பற்றிய தகவல்களையும் தெரிவியுங்கள்

- Police@SG பயன்பாட்டில் i-Witness மூலமும் நீங்கள் மேல் தகவல்கள் அனுப்பலாம்
- போலிசின் உத்தரவுகளைப் பின்பற்றுங்கள், திடீர் அசைவுகள் ஏதும் செய்யவேண்டாம்

### ஈடுபடுங்கள்

Police@SG பயன்பாட்டை பதிவிறக்கம் செய்து அல்லது http://www.police.gov.sgக்கு சென்று உங்கள் அறிவுத் திறனை சோதித்து பார்ப்பதுடன் மேல் தகவல்களையும் பெறலாம். Police@SG பயன்பாடு வழியாகவும் அல்லது உங்கள் அருகாமையிலுள்ள அக்கம்பக்க போலிஸ் மையம் மூலமாகவும் Community Alert Service (CAS) எனப்படும் சமூக விழிப்பூட்டுச் சேவைக்கு பதிவுசெய்திடுங்கள்.

தொண்டூழியராக ஆகுங்கள், பின்வரும் நடவடிக்கைகளுக்கு பதிந்திடுங்கள்

- **அக்கம்பக்க கண்காணிப்புக் குழு (NWG)**
  அண்டை வட்டாரத்தில், ஒருவர் மற்றவருடைய வீட்டின்மீதும், சந்தேகத்திற்குரிய பொருள்கள், மனிதர்களின் நடத்தை மற்றும் நடவடிக்கைகள் ஆகியவை மீதும் ஒரு கண் வைத்துக்கொள்ளுங்கள். குற்றத் தடுப்பு நவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்திடுங்கள்.
- **சுற்றுக்காவலில் குடிமக்கள் (COP)**
  தங்கள் குடியிருப்புப் பேட்டையில் குற்றங்களைத் தடுக்கவும் நிறுத்தவும் கண்டுபிடிக்கவும் துடிப்புடன் ரோந்துசெல்லும் எங்கள் குடியிருப்பாளர்கள் குழுவில் ஓர் அங்கமாக திகழ்ந்திடுங்கள்.

http://bit.ly/CommPolSchemes எனும் இந்த வீடியோ வழியாக, எமது தொண்டூழியர் திட்டம் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள் அல்லது உங்கள் அருகாமையிலுள்ள அக்கம்பக்க போலிஸ் மையத்தை அழைக்கலாம் அல்லது அங்கு வருகைத் தரலாம்.

www.sgsecure.sg -க்குச் செல்லுங்கள்

Police@SG செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

MINISTRY OF HOME AFFAIRS

SGSECURE

STAY ALERT • STAY UNITED • STAY STRONG